செ.வெ.எண்: 38 நாள்: 16.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் வடவூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருவாரகால தீவிர வயிற்றுப்போக்கு தடுப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.09.2021) தொடங்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வடவூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருவாரகால தீவிர வயிற்றுப்போக்கு தடுப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.09.2021) தொடங்கி வைத்தார். கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. நாகை மாலி அவர்கள் உடன் உள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறை சார்பில் 16.09.2021 முதல் 30.09.2021 வரை இருவாரகால தீவிர வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் ஓஆர்எஸ் உயிர்காக்கும் அமுதம், துத்தநாக மாத்திரையும் மாவட்ட ஆட்சியரால் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.

ஓஆர்எஸ் பொடியை 1 லிட்டர் சுத்தமான குடிநீருடன் நன்றாக கலக்கவும். ஓஆர்எஸ் கரைசலை 24 மணி நேரத்திற்குள் உபயோகிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஓஆர்எஸ் கரைசலை 6 மாத குழந்தைக்கு 50 மி.லி, 7 மாதம் முதல் 2 வயது வரை 50மி.லி முதல் 100மி.லி, 2 வயது முதல் 5 வயது வரை 100 மி.லி முதல் 200 மி.லி, 5 வயதிற்கு மேல் 200 மி.லி வரை குடிக்கலாம்.

துத்தநாக மாத்திரையை 2 மாதம் முதல் 6 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் அரை மாத்திரை சேர்த்து காலை வேளையில் ஒரு முறை அளிக்க வேண்டும். 6 மாதம் முதல் 5 வயது வரை தாய்ப்பாலுடன் சேர்த்து 1 மாத்திரைரையை அளிக்க வேண்டும். துத்தநாக மாத்திரையை உட்கொள்வது மூலம் வயிற்றுப்போக்கினை விரைவில் குணப்படுத்தும். அடுத்து வரும் 3 மாதங்களுக்கு வயிற்றுப்போக்கு மற்றும் நிமோனியா காய்ச்சலில் இருந்து காக்கும் என உலக சுகாதார நிறுவனம் மற்றும் இந்திய அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வயிற்றுப்போக்கின் போது குழந்தைகளுக்கு தாய்ப்பாலை தொடர்ந்து கொடுக்கவும், குழந்தைகளுக்கு உணவூட்டுவதற்கு முன்பும் பின்பும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவ வேண்டும்.

சுத்தம் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு முறைகளை கடைபிடிக்கும் அரசு மருத்துவ மனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒன்றிய அரசினால் காயகல்ப் என்ற விருது வழங்கப்படுகிறது. அதனைத்தொடர்ந்து கடந்த 2020ஆம் ஆண்டிற்கான காயகல்ப் விருதினை நாகப்பட்டினம் மாவட்டம் வடவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள், கீழ்வேளுர் சட்டமன்ற உறுப்பினர் திரு.நாகை மாலி அவர்கள் வழங்கப்பட்ட விருதினை பார்வையிட்டு விருது பெற்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கும் விருது பெற உறுதுணையாக இருந்த இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மருத்துவர்.பி.விஜயகுமார் அவர்களிடம் வழங்கினார். வட்டார மருத்துவர் எ.ஆர்.முஹம்மது உமர் உடன் உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.விஜயகுமார், மாவட்ட பயிற்ச்சி மருத்துவ அலுவலர் மரு.திருமுருகன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**

1 முதல் 2 வயதுடையவர்களுக்கு அல்பெண்டாசோல் ½ மாத்திரை (200mg), 2 முதல் 19 வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் மற்றும் 20-30 வயதுடைய மகளிருக்கு அல்பெண்டாசோல் 1 மாத்திரை (400mg) வழங்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் முகாமில் 01 முதல் 19 வயதுடைய 1,99,951 குழந்ழைதகளுக்கு, 20 முதல் 30 வயதுடைய 41,899 மகளிருக்கும் மாத்திரை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. முகாம் நடைபெறும் இடங்களில் கோவிட்-19 தடுப்பு வழிகாட்டும் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**